திரு. ஆ. நல்லசிவன் : மூலதனத்தோடு ஒப்பிடும்போது நிகர லாபம் அதிகமாக இருக்கிறது. என்.டி.சி. மில், கூட்டுறவு மில் விஷயங்களில் சிபாரிசு செய்தது போல் 20 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொகையை இனாமாகவாவது கொடுக்க சிபாரிசு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் நடைபெறும்.

4. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கையை அளித்தல்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கையை அவை முன் சமர்ப்பிக்கிறேன்.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1979-80 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விவாதம்.—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக் கின்றவர்கள் இல்லையென்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, கடைசி நேரத்தில் பல பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி பல முறை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். பேசப் போகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னாலேயே பெயர் கொடுக்க வேண்டும். பெயர் கொடுத்தவர்கள் இல்லையென்று நினைக்கின்றபோது, கடைசி நேரத்தில் பல பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே மாண்பு மிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தைச் சுருக்கி, விரிவாகப் பேசாமல் சுருக்கமாக விரைவில் பேசி முடித்து, ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.

(முற்பகல் 11-10)

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின் சாரத்தினுடைய நிலையை நினைத்துப் பார்க்கிறபோது, நம்முடைய மாநிலம் ஒவ்வொரு ஆண்டும் மின்வெட்டில் இருக்கிற மாநிலமாக இருந்து வருகிறது. 75 சதவீதம் ஒவ்வொரு ஆண்டும் மின்வெட்டைச் சந்திக்கிறது என்ற